குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா.2 சி.சி. எண்.56/2020

2023–ம் ஆண்டு ஏப்ரல் 24–ம் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | வீரப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

எதிரி ஆஜர்

முதல் விசாரணை.

நான் ஓமலூர் ஈஸ்வரன் கோவில் அருகில் குடியிருக்கிறேன். அ.சா.1 எனது மனைவி. எனது மனைவி கனகா மருத்துவமனையில் வேலை செய்கிறார். நான் கூலி வேலை செய்கிறேன். கடந்த 12.05.2019–ம் தேதி காலை 7.00 மணியளவில் என் மனைவி வேலைக்கு செல்வதற்காக ஓமலூர் பஸ் நிலையம் அருகே உள்ள சிவா காபி பார் அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது எனது மனைவி கழுத்தில் அணிந்திருந்த தாலி கொடி செயின் 2–1/2 பவுன் எடையுள்ளது மற்றும் தாலி 1/2 பவுன் எடையுள்ள தாலி கொடியை பறித்து சென்று விட்டதாக என் மனைவி என்னிடம் தகவல் சொன்னார். நான் அங்கு சென்று அவரை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்றேன். என் மனைவி இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை.

சாட்சி. கோவிந்தராஜ்

ஓம்/– ஜெ. ஹரிஹரசுதன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.